இந்த இரண்டையும் மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது. 1-1-1981 க்குப் பிறகு போடப்பட்டுள்ள உத்தரவு மூலமாக இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை மாறுமானால் இன்னும் பல சங்கங்கள் உருவாவதற்கு இடமிருக்கிறது.

சிறப்பு அங்காடிகளில் சுயசேவைப் பிரிவுகள்.

585—(*வினா எண்: 6126) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, தேனாம்பேட்டையிலுள்ள காமதேனு சிறப்பு அங்காடியில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் 'சுயசேவைப்பிரிவு' தமிழகமெங்கும் விரிவுபடுத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: ஆம்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமதேனு சிறப்பு அங்காடியைப்போல இங்கே பல்வேறு இடங்களில் அமைப்பதற்காக அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று கூறினார்கள். எந்தெந்த நகரத்தில் அமைக்க இருக்கிறார்கள்? படித்து பட்டம் பெற்ற, வேலையற்றவர்களுக்கு சுய வேலைப் பிரிவு மூலம் வேலை கொடுப்பதற்கு இது ஏதுவாக இருக்கின்ற காரணத்தினால் பெருநகரமாக இருக்கின்ற தஞ்சை, குடந்தை, திருச்சி, கோவை போன்ற நகரங்களில் உடனடியாக அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன ஆண்டிலே 10 இடங்களிலே திறந்திருக்கிறோம். வருகின்ற இந்த ஆண்டிலே 25 இடங்களிலே திறப்பதாக இருக்கிறோம். இந்த ஆண்டிலே கும்பகோணத்திலேகூட திறப்பதற்கு வேண்டிய வேலைகளைச் செய்திருக்கிறோம். தஞ்சாவூரிலே திறப்பதற்கு வேண்டிய வேலைகளையும் நிச்சயமாகச் செய்வோம். மொத்த, பண்டக சாலைகள் உள்ள தலைமை இடங்களிலெல்லாம் கட்டாயமாக ஒரு சுய சேவைப் பிரிவும் இருக்கவேண்டுமென்ற உத்தரவினையும் நாங்கள் அனுப்பி இருக்கிறோம் என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே படித்த பட்டத்தாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? விலை அதிகமாக உள்ள பொருள்களாக இருந்தாலும், சாதாரண பொருள்களாக இருந்தாலும் 'கிரடிட்' முறையிலே கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1986 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரிகள் இதற்கு வேண்டியதில்லை. சேல்ஸ்மேன் இடத்திற்கு எஸ்.எஸ்.எல்.சி. படித்தாலே போதும் என்று நாங்கள் வைத்திருக்கிறோம். ஆனால் பட்டதாரிகளைப் பொறுத்த அளவிற்கு எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸிலிருந்து வரும் என்று சொன்னால் அவர்களுக்கு நாங்கள் முன்னுரிமை வழங்க முடியும். 'கிரடிட்' பற்றி நாங்கள் தனியாக கொடுக்கின்ற வழக்கம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10.10)

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே 10 இடங்களில் ஆரம்பித்து உள்ளதாகச் சொன்னார்கள். இப்போது இந்த சுய சேவைப் பிரிவு 25 இடங்களில் ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னார்கள். அந்த 25 இடங்கள் எவை என்பதையும் அதில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதகமண்டலம் இருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஊட்டியும் நிச்சயமாக அதில் உண்டு என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 25 ஊர்களின் பட்டியல் தற்போது என்னிடத்தில் இல்லை. ஏன் என்றால் இப்போது தான் பட்ஜெட்டில் அறிவித்து இருக்கிறேன். அதற்கு வேண்டிய வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

லாடவரத்தில் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம்.

586—(*வினா எண் 8972) திரு. த. பழனி : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு வட்டத்தில் லாடவரத்தில் புதியதாக அமைக்க இருந்த கூட்டுறவு விவசாய நாணயச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாங்காடு, சர்வந்தாங்கல் மற்றும் குஞ்சரப்பந்தாங்கல் கிராமங்களை சேர்த்து லாடவரத்தில் ஒரு புதிய விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கம் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கூட்டுறவுச் சங்கம் எப்போது ஆரம்பிக்கப்படும்? அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே நேரடியாக வந்து ஆரம்பித்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.